திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி அறிஞர் அண்ணா அரசு மேல் நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு விழா சிறப்புரையாற்றி சிறந்த பள்ளி மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கினார்கள். உடன் உயர் நீதிமன்ற ஓய்வு நீதியரசர் க.ஞானபிரகாசம், நகர் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், துணை தலைவர் க.ஸ்ரீதர், தலைமையாசிரியர் கிறிஸ்டோபர்ஜெயக்குமார், தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, காயத்ரிஸ்ரீதர், ப.ச.கமலேஷ், மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திமுக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் பள்ளி மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் உத்தரவின்பேரில், தலைமைச் செயலகத்தில் நேற்று (06.01.2026) போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் 2026-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு, போக்குவரத்துத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்குவது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்த சரவெடியாக அடுத்தடுத்த மூன்று திட்டங்கள்!

எதிர்க்கட்சிகளோ ஆட்டம் கண்டுள்ளனர்; மக்களோ மகிழ்ச்சியடைந்துள்ளனர்!

“தினகரன்” நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜன. 7 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சரவெடியாக அடுத்தடுத்து மூன்று திட்டங்கள் அறிவித்ததை தொடர்ந்து அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால் எதிர்க்கட்சிகளோ ஆட்டம் கண்டுள்ளனர் என ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:

முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது முதல், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் உள்பட அனைத்துத் தரப்பு மக்களின் நலன்களை காக்க தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார். தமிழகம் முன்னெப்போதும் கண்டிராத வளர்ச்சியை எட்டியிருப்பினும், ஒன்றிய அரசு வரிப்பகிர்வை. தொடர்ந்து குறைப்பது, திட்டங்களுக்கான நிதியை குறைப்பது அல்லது முறையாக விடுவிக்கப்படாமல் இருப்பது, ஜி.எஸ்.டி. மாற்றங்களால் மாநில வரி வருவாய் குறைந்து வருகிறது. ஆனாலும் தமிழ் நாடு அரசு, பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் தமிழக அரசு, ஊழியர்கள், ஆசிரியர்களின் 20 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், ஓய்வூதியம் என்ற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த இரு தினங்களுக்கு முன் வெளியிட்டார். அதன்படி, ரூ.25 லட்சம் வரை பணிக்கொடை, இறுதி சம்பளத்தில் 50 சதவீதம் வரை ஓய்வூதியம் வழங்கப்படும் என்பது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. தொடர்ந்து 2 கோடியே 23 லட்சம் ரேஷன் கார்டுகளுக்கு ரூ.3 ஆயிரம் ரொக்கப்பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் அறிவித்தார்.

தினகரன்

ஜனவரி 6, 2025 செவ்வாய்க்கிழமை

முதல்வரின் சரவெடி

முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றது முதல், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் உள்பட அனைத்து தரப்பு மக்களின் நலன்களை காக்க தேவையான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார். தமிழகம் முன்னெப்போதும் கண்டிராத வளர்ச்சியை எட்டியிருப்பினும், ஒன்றிய அரசு வரிப்பகிர்வை. தொடர்ந்து குறைப்பது, திட்டங்களுக்கான நிதியை குறைப்பது அல்லது முறையாக விடுவிக்கப்படாமல் இருப்பது, ஜிஎஸ்டி மாற்றங்களால் மாநில வரி வருவாய் குறைந்து வருகிறது. ஆனாலும் தமிழ் நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் தமிழக அரசு, ஊழியர்கள், ஆசிரியர்களின் 20 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், ஓய்வூதியம் என்ற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த இரு தினங்களுக்கு முன் வெளியிட்டார். அதன்படி, ரூ.25 லட்சம் வரை பணிக்கொடை, இறுதி சம்பளத்தில் 50 சதவீதம்

மேற்றும் வகையில், ஓய்வூதியம் என்ற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த இரு தினங்களுக்கு முன் வெளியிட்டார். அதன்படி, ரூ.25 லட்சம் வரை பணிக்கொடை, இறுதி சம்பளத்தில் 50 சதவீதம் வரை ஓய்வூதியம் வழங்கப்படும் என்பது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. தொடர்ந்து 2 கோடியே 23 லட்சம் ரேஷன் கார்டுகளுக்கு ரூ.3 ஆயிரம் ரொக்கப்பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக, மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற “உலகம் உங்கள் கையில்” என்ற வகையில் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 20 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் செயல்படுத் தப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து நேற்று தொடங்கி வைத்தார். இதன்மூலம் அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல், மருத்து வம், விவசாயம், சட்டம் உள்பட அனைத்து துறை கள் சார்ந்த மாணவர்களுக்கும் முதல் கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமே மாணவர்கள் டிஜிட்டல் திறனை வளர்த்து கொள்ள வேண்டும். புதுபுது கணினி தொழில்நுட்பத்தை கற்று கொள்ள வேண்டும் என்பது தான். கடந்த 2019ம் ஆண்டு மடிக்கணினி வழங்கிய அப்போதைய அ.தி.மு.க. அரசு பாதியிலேயே நிறுத்திவிட்டது. மடிக்கணினி வழங்கக் கோரி சென்னையில் போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தியதும் அ.தி.மு.க. ஆட்சியில்தான்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சரவெடியாக அடுத்த டுத்து மூன்று திட்டங்கள் அறிவித்ததை தொடர்ந்து அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ள னர். ஆனால் எதிர்க்கட்சிகளோ ஆட்டம் கண்டுள்ளனர். இது அவர்கள் வெளியிடும் அறிக்கையிலேயே தெரிகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்பு போடப்பட்ட அ.தி.மு.க. - பா.ஜ. கூட்டணியில் சிக்கல் நீடிக்கிறது. தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி என ஒன்றிய உள் துறை அமைச்சர் அமித்ஷா கூறுகிறார். அ.தி.மு.க. தனித்தே ஆட்சி என எடப்பாடி பேசுகிறார்.

இத னால் முர ண்பாடான கூட்டணியாக நிலவுகிறது. மேலும் எடப்பாடிக்கு அமித்ஷா புதுபுது நெருக்க டிகளை கொடுத்து வருகிறார். புதிய வரவான தவெகவுடன் கூட்டணி அமைக்க இதுவரை சிறிய கட்சிகள் கூட வரவில்லை. மேலும் கரூரில் 41 பேர் பலியான சம்பவத்தில் நடிகர் விஜய் மீதான சிபிஐயின் பிடி இறுகுகிறது. இம்மாத இறுதியில் அவர் மீதான விசாரணை இருக்கும் என கூறப்படுகிறது. இந்நிலையில் எதைப்பற்றியும் யோசிக்காமல் மக்களுக்கான அரசாக தொடர்ந்து பல்வேறு திட்டங்களை தீட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருவதால் எதிர்க்கட்சிகள் நிலை குலைந்து உள்ளன.

இவ்வாறு “தினகரன்” தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

புழல் – பொப்பிலிராஜா அரசுப் பள்ளி

மாற்றுத்திறன் மாணவர்களுக்கு பல்வகைத் திறன் பூங்கா - உபகரணங்கள்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

சென்னை, ஜன.7-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் நேற்று (06.01.2025) சென்னை, புழல், பொப்பிலிராஜா அரசு மேல்நிலைப்பள்ளியில் மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கான பல்வகைத் திறன் பூங்காவினை திறந்து வைத்து, மாற்றுத் திறனுள்ள மாணவர்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்கினார்கள்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், 2024--25-ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது, தமிழ்நாடு சட்டப் பேரவையில், 24.06.2024 அன்று, மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் புலன் உணர்வுத்திறன், அறிவுத்திறன், பெருந்தசை இயக்கத்திறன் மற்றும் நுண்தசை இயக்கத்திறன் ஆகியவை மேம்படுவதற்காக, அவர்களின் பல்வகைப் புலன்கள் தூண்டப்பட்டு விளையாட்டு வாயிலாக கற்றல் அனுபவங்களைப் பெறத்தக்க வகையில் பல்வகைத் திறன் பூங்கா உருவாக்கப்படும் என்கின்ற அறிவிப்பை வெளியிட்டார்.

இதன் அடிப்படையில், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் கீழ் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்காக தமிழ் நாட்டின் 20 மாவட்டங்களில் மொத்தம் 20 பல்வகைத்திறன் பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு பூங்காவிற்கும் தலா ரூ.13 லட்சம் வீதம், ரூ.2.6கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக, சென்னை மாவட்டத்தில் புழல் ஒன்றியத்தில் பல்வகைத்திறன் பூங்கா தற்போது முழுமையாக நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பூங்கா சாதாரண விளையாட்டிடமாக இல்லாமல், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பார்த்தல், கேட்டல், தொடுதல் மற்றும் சம நிலை போன்ற பல்வேறு உணர்திறன்களைத் தூண்டும் வகையில் சிறப்பான வடிவமைப்புடன் உருவாக்கப்பட்ட பூங்கா ஆகும்.

அனைத்துக் குழந்தைகளும் ஒன்றிணைந்து விளையாடவும், விளையாட்டின் மூலம் கற்கவும் ஏதுவான சிறந்த இடமாகும். இதன் மூலம் புழல் ஒன்றியத்தில் 1 முதல் 12 வகுப்பு வரை கல்வி பயிலும் 410 சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவர்கள் பயனடைவர்.

பூங்காவில் நிறுவப்பட்டுள்ள விளையாட்டு மற்றும் உணர்திறன் உபகரணங்கள்

- சறுக்கு (Slide)
- சுழல் மேடை (Merry-Go-Round)
- ஊஞ்சல் (Swing)
- சீசா (Sea-Saw)
- பல்வேறு பரப்பு கொண்ட கட்டங்கள் (Blocks of Different Textures)
- பந்து தடாகம் (Ball Pool)
- காற்றாடி ஓசை (Wind Chime)
- பூந்தொட்டிகள்
- கூடைப்பந்து அமைப்பு மற்றும் பந்து
- எறிபந்து
- வாலிபால்
- ஸ்கிப்பிங் கயிறு - 4
- செயல்முறைப் பலகை Occupational Board
- Water Kettle - 2

பயன்கள்:

இந்த பல்வகைத்திறன் பூங்காவில் நிறு வப்பட்டுள்ள சறுக்கு, ஊஞ்சல், சீசா மற்றும் சுழல் மேடை போன்ற இயக்க உபகரணங்கள் குழந்தைகளின் சமநிலை, உடல் கட்டுப்பாடு மற்றும் இடவெளி உணர்வை மேம்படுத்துவதாக அமையும்.

பந்து தடாகம், பல்வேறு பரப்புகள் கொண்ட கட்டங்கள், பூந்தொட்டிகள் மற்றும் காற்றாடி ஓசைகள் போன்ற உணர்திறன் கூறுகள் தொடுதல், ஒலி மற்றும் இயற்கை உணர்வை மேம்படுத்தி மனஅமைதியை ஏற்படுத்துவதாக அமைந்திடும்.

மேலும், கூடைப்பந்து, எறிபந்து, வாலிபால், ஸ்கிப்பிங் கயிறு மற்றும் செயல்முறைப் பலகை போன்ற செயல்பாட்டு உபகரணங்கள் கை-கண் ஒருங்கிணைப்பு, தசை வலிமை, குழுவாக விளையாடும் திறன் மற்றும் நுணுக்கமான வேலை செய்யும் திறன்களை மேம்படுத்தத் துணை புரியும்.

பயன்பெறுவோர்:

இந்த உபகரணங்கள் புற உலகச் சிந்தனை இல்லாமை (Autism), கவனக்குறைவு மற்றும் அதீத செயல்பாட்டுக் குறைபாடு (ADHD) மற்றும் மூளை முடக்குவாதம் போன்ற சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் சிகிச்சைத் தன்மை கொண்ட விளையாட்டு அனுபவத்தை வழங்குகின்றன. இந்தப் பூங்கா அவர்களுக்கு விளையாட்டு வாயிலாக இயன்முறை சிகிச்சை அளிக்க ஏதுவாக உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தமிழகம் முழுவதும் 1 முதல் 12 வகுப்பு வரை கல்வி பயிலும் சிறப்பு கவனம் தேவைப்படும் 10482 மாணவர்கள் பயனடைவர்.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர். ச. கண்ணப்பன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கூடுதல் மாநில திட்ட இயக்குநர் திருமதி. எஸ். உமா, இணை இயக்குநர் வை.குமார், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கபீர், மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவ - மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 321 வது நாள்

கொளத்தூர் மேற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஜன.7-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 321 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (06.01.2026), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 69அ, தாந்தோன்றி அம்மன் கோயில் தெரு, அகரம், ஆனந்தன் பூங்கா அருகில் 2) வட்டம் 69, 18வது தெரு, ஜி.கே. எம்காலனி, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பெரான்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத் குமார், க.பா.பிரதீப் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம் 5ல் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் சுய உதவிக் குழுக்கள் வாயிலாக தற்காலிகமாகப் பணியாற்றி வந்த தூய்மைப் பணியாளர்கள் 6 பேர், தற்போது, இராயபுரம் மண்டலத்தில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமான ராம்கி நிறுவனத்தில் தூய்மைப் பணியாளர்களாக இணைந்து அவர்களுக்கான பணி ஆணை இந்நிறுவனத்தினரால் (05.01.2026) அன்று வழங்கப்பட்டது.

நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, முன்னிலை! ரமணி மாதவன் எம்.சி, தலைமையில்

மதுரவாயல் 147 வது வட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்கல்! லயன் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, ஜன. 07

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வளசரவாக்கம், 147 வது வார்டுக்கு உட்பட்ட ஆலப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா இன்று (07.01.2026 புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு மிதிவண்டியை வழங்குகிறார். வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர், பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வைக்கிறார்.

147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மகளிர் அணியினர் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 147 வது வட்டச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. வர்த்தகர் அணி

விருதுநகர் வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு, தி.மு.க. வர்த்தகர் அணியின் விருதுநகர் வடக்கு மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ப. ரமேஷ் அவர்கள் நரிக்குடி தெற்கு ஒன்றிய பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்கு பதிலாக **ச.மூக்கையன்**, (4/55, து.சேதுபுரம், தும்முசின்னம்பட்டி, திருச்சுழி - 626118, விருதுநகர் மாவட்டம்.) அவர்களும், மேலும் **பா. மலைச்சாமி**, (ரெங்கையன் நாயக்கன்பட்டி, சேதுபுரம், நரிக்குடி, விருதுநகர் மாவட்டம்.),

நை. முகம்மது முஸ்தபா, (131, மதுரை - தூத்துக்குடி சாலை, காவல் நிலையம் எதிரில், காரியாபட்டி - 626106, விருதுநகர் மாவட்டம்.), **பு. வெங்கடேஷ்**, 1/201/3எ, சக்தி நகர், தேவர்குளம், சிவகாசி - 626124, விருதுநகர் மாவட்டம்.) ஆகியோரும் விருதுநகர் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை – 18 –
நாள்: 06.01.2026

காசி முத்துமாணிக்கம்
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

தமிழர் திருநாள் பொங்கல் விழாவை முன்னிட்டு அண்ணா நகர் தொகுதிக்கு உட்பட்ட பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு பொருட்களை சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் 105வது வார்டில் முதல் கட்டமாக, வீட்டு உபயோக பொருட்கள் அடங்கிய தொகுப்பை வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, பகுதி செயலாளர் ந.இராமலிங்கம், மாமன்ற உறுப்பினர் அதியமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.